Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Thurai Amaivu and its Problems in the Songs of *Nattrinai*

**Dr.A.Revathi**, Assistant Professor, Caussanel Arts and Science College, Muthupettai, Ramanathapuram.
**ORCiD: https://orcid.org/0000-0001-5671-3104**
**DOI: 10.5281/zenodo.6622664**

## Abstract

*The mechanisms for determining the 'thurai' in the agam songs and the study of the inner songs have not yet been analyzed elaborately. This paper will give an understanding of Tiolkappia Thinai Poetry and an understanding of the legacy of Sangam literary songs. The author has divided the field into two sections for certain songs from the Sangam literature. It is difficult to determine which of the two fields is most appropriate for the song. One of the two sectors is the pioneering one and the other is the termination sector, which is set up to solve problems in the context. The study also sets out to determine what of the two 'thurais' is the most suitable one for the song with the context of the songs with regard to the Thokai descriptions, suitable thokai, message on the writers of the explanatory notes, and problems that arise from the language, two or three thura is of the same song, and the problems that arise in the structure.*

**Keywords:** *Tolkappiyam*, *Nattrinai*, Thurai, Setting, Poems, Problems.

.

## References

[1] Ila. Gloria Sundaramati. Literary Education and Analysis, Meyyappan Tamil University, Chennai 2001.
[2] Va. Suba. Manikkam, *Tamilkadal*, Meyyappan Publishing, Chidambaram 2005.
[3] Ilampuranar (U. A.), *Tolkappiya Porulathikaram*. Kazhaga Veliyeeedu, Chennai 1977.
[4] Toxicology. *Tolkappiyam Porul*. Saiva Siddhanta Publishing House, Chennai 1980.
[5] Na. Balakrishnan. *PorulathikaVazhi Nattrinai oor Aaivu*. Ilango Publishing, Chennai 2007.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# நற்றிணைப் பாடல்களில் துறை அமைவும் சிக்கல்களும்

**முனைவர் அ.ரேவதி,** உதவிப்பேராசிரியர், கௌசானல் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
முத்துப்பேட்டை, இராமநாதபுரம் மாவட்டம்.
ORCiD: https://orcid.org/0000-0001-5671-3104
**DOI: 10.5281/zenodo.6622664**

**ஆய்வுச்சுருக்கம்**

*அகப்பாடல்களைப் படிப்பவர் அதன் திணை, துறைகளைத் தீர்மானிப்பதற்கான வழிமுறைகள் முடிந்த முடிபாக இதுவரை வகுக்கப்பெறவில்லை. இந்த வழிகாட்டுதலுக்குத் தொல்காப்பியத் திணைக் கவிதையியல் பற்றிய புரிதலும் சங்க இலக்கியப் பாடல்கள் மரபு பற்றிய அறிதலும் தேவைப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் சில பாடல்களுக்குத் துறையாசிரியர்கள் இரண்டு துறைகளை வகுத்துள்ளனர். இரண்டு துறைகளில் எத்துறை இப்பாடலுக்கு பொருத்தமான துறை என்பதை தீர்மானிப்பது சிக்கலாக உள்ளது. இரண்டு துறைகளில் ஒன்று வழிநிலைத் துறையாகவும் மற்றொன்று அதனை முடிக்கும் முடிப்புத்துறையாகவும் அமைந்து சூழலுக்கேற்பத் துறை அமைப்பில் எழும் சிக்கல்களைத் தீர்க்கும் விதமாக அமைகின்றது. தொகை நூல்களில் பாடல்களின் சூழல்களைக் கொண்டு இரண்டு துறைகளில் எந்தத் துறை அப்பாடலுக்குப் பொருத்தமான துறை என்பதைத் தீர்வு காணும் விதம், திணை துறை விளக்கங்கள் , வழிநிலை துறைகள், உரை எழுதியோர் பற்றிய குறிப்புகள், மொழி பாங்கில் எழும் சிக்கல்கள், ஒரே பாடல் இரண்டு மூன்று துறைகள், அகப்பாடல்களில் துறை அமைப்பில் எழும் சிக்கல்கள் போன்றவற்றைப்பற்றி விளக்குவதாக அமைகின்றது.*

**திறவுச்சொற்கள்:** *தொல்காப்பியம், நற்றிணை,* துறை, அமைப்பு, பாடல்கள், சிக்கல்.

**முன்னுரை**

அகப்பாடல்களைப் படிப்பவர்அதன் திணை, துறைகளைத் தீர்மானிப்பதற்கான வழிமுறைகள் முடிந்த முடிபாக இதுவரை வகுக்கப்பெறவில்லை. இந்த வழிகாட்டுதலுக்குத் தொல்காப்பியத் திணைக் கவிதையியல் பற்றிய புரிதலும் சங்க இலக்கியப் பாடல்கள் மரபு பற்றிய அறிதலும் தேவைப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் சில பாடல்களுக்குத் துறையாசிரியர்கள் இரண்டு துறைகளை வகுத்துள்ளனர். இரண்டு துறைகளில் எத்துறை இப்பாடலுக்கு பொருத்தமான துறை என்பதை தீர்மானிப்பது சிக்கலாக உள்ளது. இரண்டு துறைகளில் ஒன்று வழிநிலைத் துறையாகவும் மற்றொன்று அதனை முடிக்கும் முடிப்புத்துறையாகவும் அமைந்து சூழலுக்கேற்பத் துறை அமைப்பில் எழும் சிக்கல்களைத் தீர்க்கும் விதமாக அமைகின்றது. தொகை நூல்களில்பாடல்களின் சூழல்களைக் கொண்டு இரண்டு துறைகளில் எந்தத் துறை அப்பாடலுக்குப் பொருத்தமான துறை என்பதைத் தீர்வு காணும் விதமாக நற்றிணைப் பாடல்களில் காணப்படும் இரண்டு துறை பாடல்களில் அமையும் சிக்கல்களைப் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திணை துறை விளக்கங்கள்**

சங்கப் பாடல்களுக்குக குறிக்கப்பட்டுள்ள திணை, துறை விளக்கங்கள் எந்தப் பின் புலத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளன என்பது பற்றி ஒரு தெளிவான முடிவுக்கு வர இயலவில்லை.

கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டு திணைகளும் அகப் பொருளுக்கு உரியனவாகத் தொல்காப்பியரால் சுட்டப்பட்டுள்ளன. இதற்கிணங்க இத்திணையில் அமைந்த பாடல்கள் சில கலித்தொகையில் இடம்பெற்றுள்ளன. அதேவேளையில் இவற்றைப் புறப்பொருள் திணைகளாகப் புறப்பொருள் வெண்பாமாலை வகைப்படுத்தியுள்ளது. அதற்குத் தகுந்தாற்போல் கைக்கிளையும், பெருந்தினணயும் புறநானூற்றில் புறப்பொருள் திணைகளாகவே குறிக்கப்பட்டுள்ளன. மற்றொன்று புறநானூற்றில் குறிக்கப்பட்ட துணை வஞ்சி என்னும் துறை தொல்காப்பியத்திலோ, புறப்பொருள் வெண்பாமாலையிலோ இடம் பெறவில்லை. சங்கப்பாடல்களுக்குத் திணை, துறை முதலியவற்றை வகுத்தோர் அவற்றைத் தொல்காப்பியத் திணை வகைப் பாட்டியலிலிருந்து மேலும் விரிவுபடுத்தி வகைப்படுத்த முற்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது. சங்கப் பாடல்களுக்குத் திணை, துறை வகுக்கப்பட்ட காலத்தில் திணை, துறை வகைப்பாட்டுச் சிந்தனையில் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றம் ஏற்பட்டிருந்திருக்கிறது. இம்மாற்றம் ஏற்படுத்திய தாக்கங்களை இத்தொகுப்பு முயற்சிகளுக்குத் தோற்றமாக அமைந்த நம்பி அகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை உள்ளிட்ட பொருள் இலக்கண நூல்களுள் காணமுடிகிறது திணை, துறை விளக்கங்கள் குறிக்கப்பட்ட காலத்தில் தமிழ்ப் புலமை உலகில் உருவாகியிருந்த திணை, துறை சார்ந்த சிந்தனை மரபு என்பது தொல்காப்பியத்திற்கும் அதன் பின்னர் தோன்றிய பொருள் இலக்கணங்களுக்கும் ஒரு பாலமாக அமைந்திருந்தது எனச் சொல்வதும் பொருத்தமாக அமைகின்றது.

சங்கப்பாடல்களின் பழமையைக் கருத்தில் கொண்டு அவைகள் தொல்காப்பிய இலக்கணத்திலிருந்து விலகுவதாகத் திணை, துறை வகுத்தது பொருந்தாது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. நச்சினார்க்கினியர் முதலில் இவ்விவாதத்தைத் தொடங்கி வைத்தார். தத்தம் புது நூல் வழிகளால் புறநானூற்றுக்குத் துறை கூறினாரேனும் அகத்தியமும், தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திர பொருளாகத் துறை கூறவேண்டுமென்றறிக (தொ.பொ.90 நச்சர் ப.2111) என்றவாறு தொல்காப்பியப் புறத்திணையியலில் அவர் எழுதியுள்ள உரை தொல்காப்பியமே புறநானூற்றிற்கு உரிய இலக்கணம் என்பதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. சங்கத் தொகை நூல்களில் குறிப்பாகப் புறநானூற்றில் சில பாடல்களுக்குத் திணைகளும், சிலபாடல்களுக்குத் துறைகளும், சிலவற்றிற்கு இரண்டும் எழுதப்பட்டிருக்கவில்லை சில பாடல்களுக்கு இரண்டு துறைகள் குறிக்கப்பட்டுள்ளன. இவை குறிப்பிட்ட ஒரு பாடலுக்குக் குறிக்கப்பெற்ற திணை துறை விளக்கங்கள் முடிந்த முடிபல்ல என்பதையும் திணை, துறை விளக்கங்கள் குறிப்பிட்ட அந்தப் பாடல் வெளிப்படுத்தும் பொருளின் ஒரு பரிமாணம் மட்டுமே என்பதையும் விளக்கி நிற்கின்றன. திணை துறை கூற்று விளக்கங்கள் சங்கப்பாடல்களை அணுகுவதற்கு மிக மிக இன்றியமையாதவை ஆகும். இவ்விளக்கங்கள் இல்லையேல் சில சங்கப்பாடல்கள் விளங்காமல் போகின்றன. அதேவேளையில் திணை துறை விளக்கங்கள் அப்பாடல்கள் வெளிப்படுத்தும் பொருள்களை கட்டுப்படுத்துவதும் இல்லை. விளக்கங்களைத் தாண்டியும் சங்கப்பாடல் ஒன்றிற்கு வேறு பொருளைக் கற்பிக்க முடியும். குறிப்பாகப் புறநானூற்றின் திணை துறை விளக்கங்களுக்கு இக்கருத்து மிகவும் பொருந்துவதாக உள்ளது.

**வழிநிலைத் துறைகள்**

**"அகப்பொருளில் சில துறைகள் வழி நிலைகளாக அமைந்துள்ளன தொல்காப்பியர் வரைதல் வேட்கைப் பொருளாகும் துறைகளைக் குறித்துப் பேசியுள்ளார்."1** குறிஞ்சித் திணையின் தொடக்கக் களன்களாகிய இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியர் கூட்டத்தின் சில

களன்கள் இவற்றிற்குப் பொருந்தி வருவனவாகும். தலைவன் கூற்றுக்களையும், வரைதல் வேட்கைப் பொருளாக அமையும், வழியின் அருமை, சிறைப்புறம் முதலிய துறைகளில் அமையும் தலைவி தோழி கூற்றுக்களையும் கொண்டால் முன்னைய தலைவி அடையும் பயனையும்பின்னைய வரைவு கூட்டும் பயனையும் எதிர்நோக்கியே முடிவுப் பொருளை நோக்க இவை வழி நிலைத் துறைகளாக அமைகின்றன. வழிநிலைத் துறைகளில் அமையும் பாடல்கள் தத்தம் துறைக்கு உரிய சிறப்புக் கூறுகளையும் முடிவுப் பயனை எதிர்நோக்கி அமையும் பொதுக் கூறுகளையும் ஒருங்கே பெற்று நிற்பதால் துறை மயக்கத்திற்கு இடனளிக்கின்றன. பாங்கற் கூட்டம், தோழியர் கூட்டம் முதலியவற்றில் அவர்களை விரித்துரைக்கும் பாங்கு அவ்வந் துறைக்குரிய சிறப்புக் கூறுகளாகும். அல்ல குறிப்பிட்ட தலைவனின் உழைப்பு பெரும்பாலும் நெஞ்சினை தன்னின் வேறாய் நிறுத்தி உறைப்பதாகும். நெஞ்சிற்கு உரைக்கும் பாங்கு இவ்வழி நிலை துறைகளில் பொதுவாக அமையும் ஒன்றாகும் தலைவி அடைவதற்கு அரியவள் என்ற பொருள் கூறு அல்ல குறியில் ஒருவர் தலைவியின் எழில் நலமும் அதை தலைவனை வசப்படுத்தியதும் அவனது காதல் துன்பமும் இத்துறைகளில் பொதுவாக அமையும் பொருட்கூறுகள், வரைதல் வேட்கைப் பொருளாக அமையும் பாடல்களில் இருதுறை அமையும் போது ஒரு துறை வழி நிலைத் துறையாகவும் மற்றொரு துறை முடிப்புத் துறையாகவும் அமையலாம்.

**துறை எழுதியோர் பற்றிய குறிப்புகள்**

துறைக் குறிப்புகள் பாடலைப் பாடியோரா ல் எழுதப்படவில்லை. பாடலினுள்ளேயே பெறும்படி குறிப்பாக அமைத்துக் காட்ட வேண்டும் என்பதைத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். நற்றினை உள்ளிட்ட சங்க அகத்தொகைப் பாடல்களைப் பாடிய புலவர்கள் இக்கொள்கையைப் பின்பற்றியே பாடல்களை இயற்றினர். ஆனால் பல பாடல்களுக்கு இரண்டு, மூன்றுமான வெவ்வேறு துறைகள் இருப்பதை காணமுடிகிறது எனவே பாடிய புலவர்கள் அவற்றை எழுதவில்லை என்பதோடன்றி அவர்கள் முன்ன விலக்கியக் கொள்கைகளை பாடலின் உள்ளேயே அமைத்து பாடினர் என்பதும் தெளிவாகின்றது. இக்குறிப்புகளை எழுதியவர் பாடல்களைத் தொகுத்தவரோ, பாடல்களுக்கு உரை வரைந்தவரோ அல்லது வேறு எவரோ எழுதிச் சென்றிருக்கலாம் என்பதை அறிய முடிகின்றது. கலித்தொகைக்கு உரை வரைந்த நச்சினார்க்கினியரேதுறை எழுதியவர் "2 என்று வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுகின்றார்.

**மொழி பாங்கிங் எழும் சிக்கல்கள்**

ஒரு மொழியில் அமையும் கூற்று, மொழிக் கூறுகளில் நின்று உருவாகும் பொருளோடு வரையறை பெற்றுவிடுவதில்லை. கூறுவோன் குறிப்பு, கூறும் சூழல், கேட்போன் நிலை இவற்றிற்கு வெவ்வேறு நிலையில் பொருள்படலாம். அல்லது பல்வேறு பொருள் எஞ்சு மாறு அமையலாம். அல்லது பல்வேறு எஞ்சுமாறு அமையலாம். இம்மொழிப்பாங்கு செறிவுற்று விளங்குகின்றது. எச்சப்பொருள் தொல்காப்பியரால் செய்யுள் உறுப்பாகக் கொள்ளப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். குறுந்தொகை 121 ஆம்பாடல் மொழிக்குரிய எஞ்சும் பண்பு எவ்வாறு துறைச் சிக்கலுக்கு அடிப்படையாகிறது என்பதற்குத் தக்க சான்றாக அமைகின்றது. இப்பாடலுக்கு அமையும் துறைகளில்,

1. குறிபிழைத்த தலைமகன் பின்னொருநாள் இரவுக்குறி வந்த பொழுது தலைவி தோழியிடம் கூறியது.
2. தோள் நெகிழ்ந்து கூறி இரவுக்குறி நேர்ந்தது தலைவன் குறிபிழைத்தமைக்குத் தங்கள் தவறு காரணமன்று

என்பதைச் சுட்டுவது தலைவியின் கொள்கையாக உட்கோளாக அமையும் போது முதல் துறையும், தோள் நெகிழ்ந்ததைக் கூறியதால் இரவுக்குறிக்கு உடன்பட்டமையும் கொண்டால் இரண்டாம் துறையும் பொருந்தி வரக் காண்கிறோம். இவ்வாறு எஞ்சு பொருட்கிளவி துறைச் சிக்கலில் குறிப்பிடத்தக்க பங்கு வகிப்பதை அறிய முடிகின்றது.

**ஒரே பாடல் இரண்டு மூன்று துறைகள்**

பாடல் கூற்றைப் பொறுத்தவரையிலோ, கேட்போரைப் பொறுத்தவரையிலோ, சூழலைப் பொறுத்த வரையிலோ, துறை ஆசிரியருக்கு மயக்கத்தை தந்ததே இரண்டு மூன்றுமான துறைகள் அமையக் காரணமாயிற்று. சான்றாக ஒரு பாடல் தலைவன் கூற்று என்றும், தோழி கூற்று என்றும் கொள்ளுவதற்கு இடனளிக்கிறது. பாடும் புலவர் ஏதேனும் ஒரு சூழலில் குறிப்பிட்ட ஒருவர் கூற, குறிப்பிட்ட ஒருவர் அதனை கேட்குமாறு அமைத்தேபாடுகின்றார். ஆனால் குறிப்பு முறையில் அவர் பயன்படுத்தும் சொற்கள் காலப் போக்கில் இருவேறு வகையாக முன்னத்தை வெளிப்படுத்த இடனளித்து விடுகின்றன. ஒப்புநோக்கு முறையில் ஒரு செய்தியைச் சுட்டுவது பொருத்தமாகும்.

சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்கு எழுதிய மடல்கள் இரண்டு. இரண்டாவது மடலினை அவள் கோசிகாமணி வாயிலாகக் கொடுத்து விடுகின்றாள். கோவலன் அந்த மடலை அப்படியே அக்கோசிகாமணி மூலம் தான் எழுதியது போலவே தன் தந்தை மாசாத்துவானுக்கு கொடுத்து அனுப்புகிறான். அவ்வாறு தந்தைக்குக் கொடுத்து விடு வதற்கேற்ற வகையில் அம் மடலின் கண் மாதவி எழுதிய சொற்களும் அவை உணர்த்தும் பொருளும் ஏற்புடையதாகுமாறு அமைந்துவிட்டன. இவ்வாறு ஒரே மடல் இருவருக்கும் ஏற்புடையதாகுமாறு அமைந்துவிட்டது போல சங்க இலக்கிய பாடல்களிலும் சில பாடல்கள் இருவகைத் துறை கூறுவதற்கேற்ற வகையில் அமைந்துள்ளன. சான்றாக,

**"அருவி ஆர்க்கும் பெருவரை அடுக்கத்து**
**ஆய்நிறம் புரையுமிவள் மாமைக் கவினே"3**

என்ற இப்பாடலில் இவள் என்று அன்மைச் சுட்டால் கூறப்படுபவள் தலைவி இங்கே கூறுவதும் கேட்பதும் அவளில்லை சூழல் தலைவன் தலைவியைப் பிரிய முற்படும்போது பெறப்படுகின்றது. அந்நிலையில் தலைவன் தன் நெஞ்சினைச் செலவழுங்குமாறும், தோழி தலைவனைச் செலவழுங்குமாறும் கூறுவதுண்டு. பாடலில் கூறுவாரும், கேட்போரும் தெளிவாக சுட்டப்படவில்லை. 'நீயே'என்ற முன்னிலைச் சுட்டினைக்கொண்டே கேட்போரையும் கூறுவாரையும் குறிப்பாகக் கருத வேண்டிய நிலை ஏற்பட்டமையின் இருவேறு வகையாக முன்னத்தைப் புலப்படுத்த வேண்டியதாயிற்று. 'நீயே' என்பது தலைவன் கூற நெஞ்சு கேட்பதற்கும், தோழி கூறத் தலைவன் கேட்பதற்கும் ஏற்புடையதாக அமைந்துவிட்டது. இவ்வாறு இருவகையாகக் கொள்ளுதற்குச் சூழலும் இடம் தந்து விடுகின்றது எனவேதான் துறையாசிரியர் இருவகைத் துறையினை எழுதியுள்ளார். இதைப் போலவே சில பாடல்களுக்கு அமைந்த இரு துறைகளில் இரண்டுமே பொருத்தமுடையனவாக அமைந்துள்ளன. சில பாடல்களுக்கு முதல் துறையோ அல்லது இரண்டாம் துறையோ பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது. சில பாடல்களுக்கு ஏறத்தாழ இரு துறையில் ஒன்று என்று சொல்லுமாறு அமைந்துள்ளன சில பாடல்களுக்கு இரண்டு துறையும் பொருத்தமற்றனவாக காணமுடிகின்றது.

**அகப்பாடல்களில் துறை அமைப்பில் எழும் சிக்கல்கள்**

எட்டுத்தொகை நூல்களில் அகநூல்களாக அமைந்துள்ள நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு , கலித்தொகை போன்ற நூல்களுக்குத் துறை வகுப்பதில் துறையாசிரியர்கள் ஒரு பாடலுக்கு இரண்டு

மூன்று துறைகளை வகுத்துள்ளனர். அப்பாடலுக்குத் துறையை வரையறை செய்வதில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அந்த வகையில் நற்றிணைப் பாடல்களிலும் இரண்டு மூன்று துறைகள் அமைந்துள்ளன. அதில் எந்தத் துறைபாட்டிற்குப் பொருத்தமான துறையாக அமைந்துள்ளது என்பதை அறிந்து அந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதை நோக்கலாம்.

**நற்றிணைப் பாடல்களில் காணப்படும் துறை சிக்கல்களும் தீர்வுகளும்**

நற்றிணைப் பாடல்களில் துறை அமைப்பில் சில பாடல்களில் சிக்கல்கள் அமைந்துள்ளன.

**"ஆனா நோயோடு அழிபடர்க் கலங்கிக்**
**காமங் கைம்மிக்க கையறு துயரங்**
**காணவு நல்கா யாயிற் பாணர்**
**பரிசில் பெற்ற விரியுளை நன்மான்"4**

என்ற இப்பாடலில்

**1. பாங்கற்க்குத் தலைவன் சொல்லியது**

**2. சேட்படுக்கும் தோழிக்குத் தலைவன் சொல்லியதூஉமாம்**

என்று இரண்டு துறைகள் அமைந்துள்ளன. 'காணவும் நல்காயாயின்' என்னும் தொடர் கொண்டே கேட்பவரைக் குறிப்பாக அறிய வேண்டிய நிலை ஏற்பட்டமையின் இவ்வாறு இருவேறு துறை அமைத்தனர். இருப்பினும் தலைவன் தோழியிடம் கூறினான் எனக் கொள்வதே பொருத்தமாக உள்ளது. தோழி குறை முடியாது சேட்படுத்துதலால் தலைவியைக் கூடப் பெறாது காமம் கைமிக்க அதனால் கையறு துயர் எய்திய தலைவன் தோழியிடம் எனது துயரைக் கண்டும் அவளோடு கூட்டுவியலாது சேட்படுத்து வையாயின் நான் நோவதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறியதாகக் கொள்வதற்கும் பாடலடிகள் இடம் தருவதை காணமுடிகின்றது.

**"தோழி சேட்படுத்துவதைஅறிந்தும் அறியாதவள் போலத் தலைவி இருப்பதால் அவள் தன்னைக் கொலை சூழ்ந்தனள் எனப் பாடலில் தலைவன் குறிப்பதும் காணமுடிகிறது. நச்சினார்க்கினியர் இப்பாடலை தலைவன் கூற்றில் "பிரிவுற்று மெலியினும் என்பதற்குக் காட்டி இது பகற்குறியில் பிரிவுற்றது என எழுதி அவன் தன் நெஞ்சிற்குக் கூறியதாகக் கொள்கின்றார்"5**

காணவும் நல்காயாயின் என்று நெஞ்சினிடம் தலைவன் கூறுவதாக இவர் சொல்வது பொருந்துவதாக இல்லை. இப்பாடலில் அமைந்துள்ள இரண்டு துறைகளில் இரண்டாவது துறையே இப்பாடலுக்குப் பொருந்துவதாக உள்ளது. முதல் துறையைப் பற்றிய குறிப்புகள் எதுவும் இடம்பெறவில்லை. இதனால் முதல் துறை வழிநிலை துறையாகவும், இரண்டாவது துறை முடிப்புத் துறையாகவும் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

**"வண்டு மூசு நெய்தல் நெல்லிடை மலரும்**
**அரியலங் கழனி ஆர்க்கா டன்ன**
**காமர் பணைத்தோள் நலம் வீறெய்திய**
**வலைமான் மழைக்கண் குறுமகள்**
**சில்மொழித் துவர் வாய் நகைக்கு மகிழ்ந்தோயே" 6**

என்ற இப்பாடலில்

**1. பின்னின்ற தலைமகன் ஆற்றானாகி நெஞ்சிற்குச் சொல்லியது.**

**2. அல்ல குறிப்பிட்டு மீள்வான் நெஞ்சிற்குச் சொல்லியது**

**3. இடைச்சுரத்துச் சென்று தலைமகள் நலம் உள்ளி மீளலுற்ற நெஞ்சினைக் கழறியது.**

என்று மூன்று துறைகள் அமைந்துள்ளன. இப்பாடலில் தலைவன் நெஞ்சிற்குக் கூறுவது தெளிவாக உள்ளது. ஆயினும்சூழல் மிகக் குறிப்பாக உள்ளது. எனவே தலைவன் நெஞ்சை நோக்கி இதுபோல வருந்திக் கூறுவது அவன்பால் எவ்வெச் சூழலில் தோன்றுமோ அத்தனைச் சூழல்களையும் குறிக்க மூன்று துறைகள் அமைக்கப்பெற்றுள்ளன. இருப்பினும்'குறுமகள் சில்மொழித் துவர்வாய் நகைக்கு மகிழ்ந்தோயே' என்னும் தொடரால் தலைவன் புணர்ச்சி கருதி வந்தது குறிப்பாக அறியப்படுகின்றது அது கிடைக்கப்பெறாது வருந்திக் கூறினமையின் இரண்டாவது துறையே மற்ற துறைகளினும் மிகப் பொருத்தமாக உள்ளது. இங்கு முதல் துறையும் மூன்றாவது துறையும் வழிநிலைத் துறையாகவும் இரண்டாவது துறை முடிப்பு துறையாக அமைந்துள்ளதையும் அறிய முடிகின்றது. குறிஞ்சியில் நெய்தல் பூ மலர்வதைக் கூறியதனால் இப்பாடலில் திணைமயக்கம் அமைந்துள்ளதையும் காணமுடிகிறது.

**"விரிபூங் கானல் ஒருசிறை நின்றோய்**
**யாரையோ நின் தொழுதனம் வினவுதும்"** 7

என்ற இப்பாடலில்

**1. இரண்டாங் கூட்டத்துத் தலைவியை எதிர்ப்பட்டுத் தலைவன் சொல்லியது.**

**2. உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைவன் சொற்றதூஉமாம்**

என்று இரண்டு துறைகள் காணப்படுகின்றன. இப்பாடலில் தலைவன் இயற்கைப்புணர்ச்சியின் பின்னும் அவன் இவள் யாரென வினவும் தன்மையள் ஆயிற்றே என்பது குறித்துக்கண்ணீர் அரும்பினாள். துறைவிளக்கம் வேறாயின் தலைவன் வணங்கியது குறித்து முறுவலித்தும் அவன் பரத்தை குறித்துப் பணியரும்பியும் நின்றாள் எனக் கொண்டால் நகை தோன்றியதால் இவளே இப்பொழுது முகக்குறிப்புக் காட்டினாள். இங்கு, "இளம்பூரணரும்", நம்பியகப்பொருள் உரையாசிரியரும் இயற்கைப் புணர்ச்சியில் முன்னிலையாக்கல் என்றும் தலைவன் கூற்றிற்குக் காட்டுகின்றனர்"[8] முதல் துறையோடுஇவ்வுரையாசிரியர்களின் குறிப்பும், இரண்டாம் துறையும் சூழலில் வேறுபடுகின்றன. தலைவன் இயற்கைப் புணர்ச்சியில் தலைவியை முன்னிலைப்படுத்திக் கூறியதாகக் கொள்வதே பொருந்துவதாய் உள்ளது. சொல்லணி மடந்தை என்பது தலைவியை முன்னிலைப்படுத்திக் கூறியவன் தான் வினவியதற்கு விடையாக அவள்பால் தோன்றிய மெய்ப்பாடுகளைக் கண்டு அவற்றைத் தன் நெஞ்சிற்குக் கூறுவது போல அவள் கேட்குமாறு கூறுகின்றான். இரண்டாவது துறை சூழலில் மிகவும் வேறுபடுகின்றது இத்துறைக்குப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் பரத்தையிற் பிரிந்துறையும் தலைவன் தலைவி பொறையுயிர்த்தமை அறிந்து வந்து பள்ளியிடத்தானாய்ஆங்கு ஊடிய தலைவியை இரந்து பணிந்து பலவாறு உணர்த்தவும், அவர் உணராளாய் ஊடல் நீட்டிக்க அல்வழித் தலைவன் நெஞ்சை நோக்கிக் கூறியதாக விளக்கம் தருகின்றார். இவரது விளக்கம் பாடற்கருத்தோடு சிறிதும் பொருந்தவில்லை. எனவே இரண்டாம் துறை சிறிதும் இப்பாடலுக்குப் பொருந்தாது. நச்சினார்க்கினியர் இப்பாடலைக் களவில் தலைவன் கூற்றில்,

**"அறிந்தோ ளயர்ப்பின் அவ்வழி மருங்கில்**
**கேடும் பீடும் கூறலும்"** [9]

என்பதற்குக் காட்டுகின்றார். முதல் துறையே இப்பாட்டிற்குப் பொருந்துவதாக உள்ளது. இரண்டாம் துறை வழிநிலைத்துறையாகவும் முதல் துறை முடிப்புத் துறையாகவும் அமைந்துள்ளது.

**முடிவுரை**

பாடல்கள் கூற்றைப் பொறுத்தவரையிலும், கேட்போரை பொறுத்தவரையிலே, சூழலைப் பொறுத்தவரையிலே, துறை ஆசிரியருக்கு மயக்கத்தைத் தந்தது இரண்டு மூன்று துறைகள் அமைய காரணமாகிறது. வழிநிலைத் துறைகளில் அமையும் பாடல்கள் தத்தம் துறைக்குரிய சிறப்புக் கூறுகளையும், முடிவு பயனை எதிர் நோக்கிபொதுக் கூறுகளையும் ஒருங்கே பெற்று நிற்பதால் துறைமயக்கத்திற்கு இடனளிப்பதைக் காண முடிகின்றது. நற்றிணை பாடல்களில் இரண்டு, மூன்று துறைகளில் அறுபத்தி இரண்டு பாடல்கள் அமைந்துள்ளதைக் காண முடிகின்றது.

**குறிப்பு**

[1] இலா. குளோறியா சுந்திரமதி, *இலக்கியக் கல்வியும் பகுப்பாய்வு* ப. 78

[2] வ.சுப.மாணிக்கம், *ஒப்பியல் நோக்கு*, ப.133

[3] *நற்றிணை*, பா. எண் 205

[4] மேலது, பா. எண் 185

[5] பாலகிருட்டினன், *பொருளதிகார வழி நற்றிணை ஓர் ஆய்வு*, ப.220

[6] *நற்றினை*, பா. எண் 155

[7] *தொல்.பொருள்.* இளம்பூரனார் உரை, நூ.98

[8] *நம்பியகப்பொருள்*, நூ.127

[9] தொல்.பொருள். *நச்சினார்க்கினியர் உரை*, நூ.102

**துணை நூற்பட்டியல்**

[1] இலா. குளோறியா சுந்தரமதி. *இலக்கியக் கல்வியும் பகுப்பாய்வும்*. மெய்யப்பன் தமிழாய்வகம், சென்னை 2001.

[2] வா .சுப .மாணிக்கம். *தமிழ்க்காதல்*. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் 2005.

[3] இளம்பூரணர் (உ. ஆ). *தொல்காப்பிய பொருளதிகாரம்*. கழக வெளியீடு, சென்னை 1977.

[4] நச்சினார்க்கினியர், *தொல்காப்பியம் பொருள்*. சைவ சித்தாந்த பதிப்பகம், சென்னை 1980.

[5] நா.பாலகிருஷ்ணன். *பொருளாதிகார வழி நற்றிணை ஓர் ஆய்வு*. இளங்கோ பதிப்பகம், சென்னை 2007.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.